ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பக்தி இலக்கியங்களில் தேவார இசை

4

**முனைவர் கு. பிரகாஷ்**
**உதவிப்பேராசிரியர் (ப.மா)**
**மாவட்ட அரசு இசைப்பள்ளி, கிருக்ஷ்ணகிரி**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**
**மின்னஞ்சல்: prakashmusicau@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் ஒளவையார் கூறுவார். எனவே இத்தகைய இறைவனை அடைவதற்கு 'கர்ம மார்க்கம், ஞான மார்க்கம், பக்தி மார்க்கம்' என்ற மூன்று வழிகளைக் கூறுவர். இதில் 'கர்ம மார்க்கம்' என்பது வேதங்களில் கூறப்பட்ட மதச் சடங்குகளையோ, யாகங்களையோ செய்து அதிலிருந்து கிடைக்கும் பயனால் இறைவனை அடைவது. 'ஞான மார்க்கம்' என்பது வேதாந்த நூல்களைக் கற்று, இறைவனே மெய்ப்பொருள் என்றுணர்ந்து இறைவனுடன் ஒன்றறக் கலப்பது. 'பக்தி மார்க்கம்' என்பது இறைவனிடத்தில் ஆழ்ந்த அன்பு செலுத்துவதால் கடவுளை உணரும் ஆற்றல் பெறுவதாகும். இறைவனை வழிபாடு செய்வதற்கு ஒன்பது வகையான பக்தி (நவவித பக்தி) முறைகளை நம் முன்னோர்கள் வரையறை செய்து வைத்துள்ளனர். இவற்றில் இசையால் இறைவனை வழிபாடு செய்வதற்கு பக்தி இசை இலக்கியங்களில் மூவரால் பாடப்பட்டு வந்த தேவார இசையை இன்றைய காலக்கட்டத்தில் இசைப்பள்ளி, இசைக்கல்லூரிகளில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் தேவார இசையை கற்றுக் கொண்டு பல ஆலயங்களிலும் பணிபுரிந்து வருகின்றார்கள். பக்தி இசையான தேவார இசையை பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் சிறப்பம்சமாகும்.

**ஆய்வு நோக்கம்**

உலக நாடுகளில் பெண்களின் பங்களிப்பானது பல துறைகளில் மேன்மையடைந்து வருவது மட்டுமல்லாமல் இசைத்துறையிலும் பல சாதனைகளைப் படைத்து வருவதைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

1. பண் - இராகம்
2. மன்னர் - அரசர்
3. பக்தி - வழிபாடு
4. பரம்பரை - தலைமுறைகள்
5. களஞ்சியம் - பண்டக சாலை

**முன்னுரை**

சைவசமய மறுமலர்ச்சி காலத்தில் எழுந்த தேவாரப் பாடல்கள் இசைக் களஞ்சியமாகக் காணப்படுகின்றன. வேற்று சமயங்களின் நெருக்கத்தில் சைவம் சிக்கியிருந்த காலகட்டத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் தோன்றிச் சைவத்தின் உண்மையான பெருமைகளை உலகத்துக்கு உணர்த்திக் காட்ட உன்னதமான தமிழ்ப் பாடல்களை உணர்ச்சிப் பிழிவுகளாக இசையில் தோய்த்தெடுத்து இனிமையான பாசுரங்களாக வழங்கியுள்ளனர். இசை

மக்களைக் கவரும் தன்மையுடையது என்பதை நன்கு உணர்ந்து பாடல்களை அதற்குத் தக்கவாறு அமைத்துப் பாடியுள்ளனர். சமயக் கருத்துக்கள் இசையை பாசுரங்களாகப் பாய்ந்து மக்களின் மனதைத் தொட்டு வளப்படுத்தியுள்ளன. அவற்றைக் களிப்புடன் பாடினால் மனம் இறைவுணர்வுக்கு ஆட்படும். சைவம் தழைக்கும். இதுதான் சைவ சமயக் குரவர்களின் நோக்கம். இது போன்ற நோக்கம் நிறைவேற இசை நல்ல துணையாக அமைந்து உதவியுள்ளது. தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வயப் பிரபந்தம் ஆகிய சைவ சமயக் குரவர்களின் நோக்கம். இதுபோன்ற நோக்கம் நிறைவேற இசை நல்ல துணையாக அமைந்து உதவியுள்ளது. தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ஆகிய சைவ, வைணவச் சமயங்களைச் சேர்ந்த நூல்களை அவ்வாறு கூறுவது வழக்கம். அவை எழுந்த கால கட்டத்தைப் பக்திக்காலம் என்று கூறுவார்கள். இதில் உள்ள தேவாரப் பாடல்கள் வழியாக அக்காலத் தமிழர் இசைப்பற்றி மிகச் சிறப்பாக அறியமுடிகிறது.

**இசையெழுச்சி**

தேவார காலத்தைத் தமிழரின் இசையெழுச்சி காலமாகக் கருதலாம். பௌத்த சமண சமயங்கள் இசைக்குச் சரியான ஆதரவு கொடுக்கவில்லை. ஆகையினால் இசைக்கலை தமிழ்நாட்டில் மட்டுமின்றி பாரத நாட்டின் பல பகுதிகளிலும் மங்கிய நிலையிலேயே காணப்பட்டது. மனிதனின் இயற்கையான இன்பவுணர்வுகளிலே இசை உணர்வு உள்ளத்துடன் நெருக்கமான பிணைப்புடன் காணப்படுகிறது. அதனைத் தடுப்பது இயலாத ஒன்று. ஒழிப்பது முடியாத செயல். ஆதரவற்ற நிலையில் இசைக்கலை மங்கித் தோன்றுமே அன்றி மாய்ந்து மறைந்து விடாது. அது மனிதனுக்கு உரியது. இயல்பாக உடையது. இனியது. உலகியல் வாழ்வுக்கு உதவும் தன்மை கொண்டது. இயல்பாக முகிழ்க்கும் இசைக்கலை உணர்வை மனித மனத்திலிருந்து அகற்ற முயலும் எந்தச் சக்தியும் வெற்றியடைய முடியாது என்பது உறுதி.

இசைக்கலைக்கு ஆதரவு கொடுக்காத பௌத்த சமண சமயங்கள் தமிழ்நாட்டில் ஆக்கம் பெற்றிருந்த காலத்தில் தமிழிசை துளியைக் காணாப் பயிரைப் போல் துவண்ட நிலையில் இருந்தது. மங்கி இருந்தது. ஆனால் மறைந்து போகவில்லை. சமணக் காப்பியங்கள் இசையின் நிலையை எடுத்துக் கூறத் தயங்கவில்லை. இசைக்கலை மக்களிடம் வாழ்ந்து வந்தது. சைவமும் இசையும் மறுமலர்ச்சி அடைய வேண்டிய காலக்கட்டத்தில் முப்பெரும் சைவ சமயக் குரவர்களும் தமிழ்நாட்டில் தோன்றினர். மூவரும் சமயப் பற்றுடன் இசை ஈடுபாடும் கொண்டவர்கள். இசையைக் கொண்டு சைவத்தை வளர்க்கத் துணிந்தனர். இசை மக்களைக் கவரும் ஆற்றலுடையது. அதனைத் துணையாக நாடினால் நினையாத அளவுக்குச் சைவ சமயம் வெற்றியடையும் என்று மூவரும் நம்பி முயன்றனர். அவர்கள் தரும் இசைக்குறிப்பு அக்கால இசையுணர்வைக் காட்டும். அந்த இசைக் குறிப்புக்களை முறையாக வகைப்படுத்தி முடிந்த அளவுக்குச் சிறப்பாகக் காண முயலலாம்.

**தேவாரப் பாடல்களின் பண்கள்**

தேவாரப் பாடல்கள் அணைத்தும் பண் சுமந்த இனிய இசைப்பாடல்கள். அவற்றில் அமைந்துள்ள பண்கள் எல்லாம் தீந்தமிழிசைப் பண்கள். மூவரும் தமிழையும் இசையையும் இணைத்துப் பாடிச் சிறப்பித்துள்ளதிலிருந்து ஒரு கருத்து விளங்க இடமுண்டு. தேவார காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள் அனைத்திலும் தமிழில்தான் வழிபாடுகள் நடத்தப்பெற்றிருக்க வேண்டும். ஆகையினால்தான் மூவரும் இறைவனைப் பாடிப் பரவும் பாடல்களை வழிபாட்டுக்கு உதவும் முறையில் தமிழ் மொழியில் தமிழ் இசையமைப்புடன் பாடியுள்ளனர்.

அக்கால மக்கள் தமிழ்ப் பண்களை நன்கு அறிந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். அனைவரும் கூடிப் பாட வேண்டும் என்ற கருத்தில் பல பாடல்களை மக்கள் இசைத்து ஈடுபடும் தன்மையில் புனைந்துள்ளனர். மூவரும் சைவத்தைத் தழைக்கச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு உடையவர்களாகக் காணப்படுகின்றனர். பிற சமயங்களின் தாக்குதலிலிருந்து சைவம் தப்பித் தலை தூக்க வேண்டுமானால் மக்களின் பெருவிதமான ஆதரவு வேண்டும். அதற்குத் தகுந்தவாறு ஆலய

வழிபாட்டு முறைகள் அமைக்கப்பட வேண்டும். மக்களின் மொழியில் அமையாத எதுவும் தழைக்க முடியாது என்பதை நன்குணர்ந்த சமயக் குரவர் மூவரும் மக்களின் மொழியான தமிழில் பாசுரங்களை இயற்றி மக்களை இறை வழிபாட்டிலும் வணக்கத்திலும் எந்த வேறுபாடும் உணராத நிலையில் கலக்கச் செய்துள்ளனர். தமிழ் இசையமைப்பு, தமிழ்ப் பண்கள் ஆகியவற்றைக் கைக்கொண்டுள்ளனர். சங்க காலத்திலிருந்தே தமிழிசையமைப்பாக இருந்த ஏழிசை, நாற்பெரும் பண்ணிலிருந்து வளர்ச்சியடைந்த தமிழ்ப் பண்கள் ஆகியவற்றைக் கைக்கொண்டு இறையுணர்வு பாடல்களை மூவரும் படைத்துள்ளனர்.

“செந்தமிழோர்கள் பரவியேத்தும்
சீர்கொள் செங்காட்டாங்குடி” (3:9)

என்று சம்பந்தர் கூறியுள்ளதைக் கொண்டு முற்கூறிய கருத்தைச் சிந்திக்கலாம்.

“தம்மலரடியொன் றடியவர்பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல்சேர
அம்மலர்க் கொன்றை யணிந்தவெம் மடிகள்
அச்சிறு பக்கத் தாட்சிகொண்டாரே” (77:4)

என்ற பாடல் வாயிலாக வடசொல் வணக்கமும் இருந்ததைச் சம்பந்தர் கூறுகிறார். வடமொழியில் இறைவணக்கம் செய்ய மறுப்ப ஏதுமில்லை. இறை முன்றில் மனிதவுணர்வுக்கு இடம் இருக்க வேண்டுமே அன்றி மொழிவுணர்வுக்கு இடம் இருக்கவே கூடாது. தமிழுக்கு முதலிடம் இருந்ததினால் அதனை சம்பந்தர் முற்கூறிச் சிறப்பித்துள்ளார் என்று கருதலாம்.

“செந்தமிழ் தேய்வமறை நாவர்செழு
நற்கலை தெரிந்த அவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனூர்” (3:80:4)

என்று மூன்றாம் திருமறைச் செய்தியைக் கொண்டு தமிழர் தெய்வ மறை ஓதியதை அறியலாம். ‘மறை பாட’ என்று பல இடங்களில் மூவரும் குறிப்பிட்டுள்ளது எதனை என்று சிந்திப்பதற்கு இப்பகுதி நல்ல சான்றாக விளங்கும். தேவார காலத்தில் பண்ணியல் பாடல்கள் தமிழிசையாக விளங்கின. பத்திமை பாடல்கள் தமிழாக இருந்தன. வழிபாடுகள் தமிழில் நடந்தன. தமிழ்ப் பண்கள் இசை நடைமுறையாக அமைந்தன. மக்கள் எளிதாக இறை நாட்டங்கொள்ள இத்தகைய இசைப் பாடல்கள் நன்கு உதவியிருக்கும் என்பது உறுதி. தேவாரப் பாடல்கள் அமைந்துள்ள தமிழ்ப் பண்களைப் பற்றி அறிய முயல்வது பயனுடைய பல நல்ல கருத்துக்களையம் சிந்தனைகளையும் வழங்கும்.

**தேவாரத்திலுள்ள பண்கள்**

1. இந்தளம்
2. காந்தாரம்
3. காந்தார பஞ்சமம்
4. குறிஞ்சி
5. கொல்லி
6. கொல்லி கௌவாணம்
7. கௌசிகம்
8. சாதாரி

9. சீகாமரம்
10. செந்துருத்தி
11. செவ்வழி
12. தக்கராகம்
13. தக்கேசி
14. நட்டபாடை
15. நட்டராகம்
16. பஞ்சமம்
17. பழந்தக்கராகம்
18. பழம்பஞ்சுரம்
19. பியந்தைக் காந்தாரம்
20. புறநீர்மை
21. மேகராகக்குறிஞ்சி
22. யாழ்முரி
23.வியாழக்குறிஞ்சி

தேவாரப் பண்கள் அனைத்தும் கிடைத்துள்ளன என்று கூறுவதற்கில்லை. தேவாரப் பாடல்கள் பல ஆண்டுகளாகத் தில்லையில் மறைக்கப்பட்டு முடங்கிக் கிடந்தன. இந்த இனிய தமிழிசைப் பண் கனிந்த பாடல்களுக்கு இந்த முடக்க நிலை ஏன் ஏற்பட்டது என்பதை ஆராய இங்குத் தேவையில்லை. இராஜராஜன் ஆட்சிக்காலத்தில் நம்பியாண்டார் நம்பியின் பெரு முயற்சியால் தேவாரப் பாடல்கள் திரும்பவும் தமிழுலகில் பண்ணிசை பரப்பின. பல பாடல்கள் மறைந்ததற்கான குறிப்பு காணப்படுகின்றது.

சில பாடல்கள் மறைந்தாலும் மீந்தவைப் பல கோயில்களில் அவற்றிற்கு உரிய பண்ணில் பாடப்பட்டு வந்தன. இத்தகைய தமிழிசைப் பாடல்களைக் கோயில்களில் பாடுவதற்காக இராஜராஜன் நாற்பது தேவாரப் பாடல் ஓதுவார்களை நியமித்திருந்தான் என்பது வரலாற்றுச் செய்தி. தேவாரப் பாடல் இசையுடன் தான் கோயில் வழிபாடுகள் நிறைவுறும் என்ற நியதி இருந்துள்ளது. தமிழிசைப் பண்களை மன்னனும் மக்களும் விரும்பி ஆதரித்துள்ளனர் என்பது தெளிவு. கோயில்கள் தேவாரப் பண்களைத் தமிழிசை ததும்ப ஓதும் ஓதுவார் பரம்பரையினர் இன்றும் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர். அவர்களைக் கொண்டு தமிழ்ப் பண்களை அடையாளம் காணத் தமிழிசைச் சங்கம் பெரிதும் பாடுபடுகிறது. படிப்படியாக அதன் முயற்சி வெற்றியடைகிறது. சங்ககால பண்ணிசையின் தொடர்ச்சியைத் தேவார இசையில் காண முயலலாம்.

**முடிவுரை**

பக்தி இலக்கிய இசையில் தேவாரப் பாடல்கள் இறைவனை இசையால் வாழ்த்திப் புகழ்வன. இசையால் உணர்வைப் பெருக்கி அருளுணர்வால் மக்களை இறை ஈடுபாட்டுக்க இழுத்து அவர்களுடைய வாழ்வில் அமைதியையும் இன்பத்தையும் ஊட்டும் முயற்சி மூவராலும் செய்யப்பெற்றுள்ளது. சைவம் வேரூன்ற இசையின் பங்கு மிகுதியாக மக்கள் மத்தியில் எழுப்பிய உணர்ச்சியால் நன்கு அறியப்படும். தேவார இசையினால் பல மன்னர்களுக்கு ஏற்பட்ட தீராத நோய்களை சரி செய்த வரலாறுகள் உண்டு என்பதை அனைவரும் அறிந்த ஒன்றாகும். பண்டைய காலம் முதல் தற்காலம் வரை தமிழிசையில் தேவாரப் பண்கள் புத்துயிர் பெற்று மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டு வந்த ஆலயங்களில் ஆண்கள் மட்டும் ஓதூவார்களாக இருந்த நிலைகள் எல்லாம் மாறி

இன்றைய காலகட்டத்தில் பெண்களும் தேவார திருமுறையைக் கற்றுக் கொண்டு பல ஆலயங்களில் ஓதுவார்களாக பணியாற்றி வந்துக்கொண்டு இருப்பது மட்டுமல்லாமல் தமிழ் மக்களிடமும் மற்றும் தேவார இசையை பல வெளிநாட்டு, மக்களும் கற்று வந்துக்கொண்டு தேவார இசையை மென்மேலும் மேன்மையடையச் செய்து வருகின்றார்கள் என்பதில் ஒருபொதும் ஐயமில்லை.

வாழ்க இசை வளர்க தேவார இசை

**துணை நூற்பட்டியல்**

1. முனைவர் ஏ.என். பெருமாள், தமிழர் இசை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மெய்ப்பொருள் அச்சகம், டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-23, 1984.
2. முனைவர் கே.ஏ. பக்கிரிசாமி பாரதி, இந்திய இசைக்கருவூலம், கலசேகர் பதிப்பு, நெசப்பாக்கம், சென்னை-78, 2002.
3. சூலூர் திருஞான சொர்ணக்குழந்தைவேல், இசைமணிக்கோவை, ஸ்ரீஸ்ரீ பிரிண்டர்ஸ், கோவை, 26, 2005.